நீதித்துறை நடுவர் எண் 1. நீதிமன்றம் நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC 125/2023

வழக்கு சாட்சி : LW10 –PW–07

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : பழனி | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 54 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **30.04.2025**

( 1,2 எதிரிகள் ஆஜர். )

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் மதுராபட்டினம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2022 ம்தேதி நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை 11.00 மணிக்கு நாகப்பட்டினம் மாவட்டம் குற்றப்பிரிவு காவல் உதவி ஆய்வாளர் விவேக்ரவிராஜ் பணியில் இருந்த போது கோயம்புத்துார் மாவட்டம் உப்பிலிப்பாளையம் போஸ்ட் பெர்க்ஸ் பள்ளி ரோடு, தான்தோன்றி என்பவரின் மகன் பி.டி.தினகர் என்பவர் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரினை பெற்று மேல்அதிகாரிகளின் ்உத்தரவின் பெயரில் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 22/2022 ச/பி.468,471,420 இ.த.ச.பிரிவுன் படி வழக்கினை பதிவு செய்துள்ளார். இவ்வழக்கினனை அப்பொழுது மாவட்ட குற்றப்பிரிவு பொறுப்பு காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முதற்கட்ட விசாரணை செய்துள்ளார். அதன் பிறகு மாவட்ட குற்றப்பதிவுக்கூடம் காவல் ஆய்வாளர் திருமதி. வள்ளி அவர்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விசாரணை செய்துள்ளார்.

2. கடந்த 19.12.2022 ம் தேதி இவ்வழக்கினை பார்வையிட்டுஎனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இவ்வழக்கின் 1வது எதிரி திருமதி. வள்ளி அவர்களால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். இவ்வழக்கின் 2வது எதிரி நீதிமன்றத்தின் மூலம் முன் ஜாமீன் பெற்றுள்ளார். பின்னர் 16.05.2022 ம் தேதி இவ்வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கின் வாதி பி.டி.தினகரன் 16.05.2022 அன்று சிங்கப்பூர் சென்று 22.05.2022 ம் தேதி மீண்டும் திரும்ப இந்தியா வந்ததற்கான TRAVEL HISTORY அறிக்கை வேண்டி கொடுக்கப்பட்ட கடித்திற்கு உதவி இயக்குநர் மத்திய அயல்நாட்டினர் விவகாரத்துறை புதுடில்லி அவர்களிடம் இருந்து நாகப்பட்டினம் DCB அலுவலகத்திற்கு வந்த அறிக்கையை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் 494 திரு.ரவிச்சந்திரன் என்பவர் மூலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ற்கு அனுப்பபட்டது. மேலும, 1வது எதிரி அசோக்குமார் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு COS.NO.03/2022 ற்கு சமர்ப்பித்துள்ள ஆவணத்துடன் வழக்கின் வாதி பி.டி.தினகரன் கையொப்பத்தினை ஒப்பீடு செய்து பார்க்க அமர்வு நீதிபதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. 27.12.2022 அன்று சென்னை தடய அறிவியல் ஆவண பிரிவுற்கு கையெழுத்து ஒப்பிடுவதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. 29.12.2022 அன்று இவ்வழக்கின் தொடர்புடைய COS.NO.03/2022 ற்கு எதிரி சமர்பித்துள்ள ஆவணம் மற்றும் விசாரணையின் போது கிடைக்கப்பெற்ற ஆவணங்களும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 மூலமாக தலைமை காவலர் சதீஷ்குமார் என்பவரிடம் கொடுத்து சென்னை தடய அறிவியல் ஆவணப்பிரிவிற்கு அனுப்பி 30.12.2022 அன்று சென்னையில் ஒப்படைக்கப்பட்டது. 20.01.2023 அன்று சென்னை தடய அறிவியல் ஆவணப்பிரிவிற்கு முன்னுரிமை கடிதம் கொடுக்கப்பட்டது. 16.03.2023 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து தலைமை காவலர் 1013 சதீஷ்குமார் என்பவர்களால் ஆய்வறிக்கை பெற்று நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகம் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 27.03.2023 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வக நிபுணர் திருமதி. சுபா அவர்களிடம் விசாரணை செய்தததில் இருந்தும் வழக்கின் 1வது எதிரி தான் வழக்கு தொடுத்திருந்த COS.NO.03/2022 வழக்கின் ஆவணத்தின் மீதான ஆய்வு முடித்து சென்னை தடய அறிவியல் ஆவணப்பிரிவில்

இருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வறிக்கையில் இருந்தும் மேற்படி எதிரியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில் இருக்கும் இவ்வழக்கின் வாதி பி.டி. தினகரன் என்பவரின் கையெழுத்து இல்லை என தெரிய வருகிறது. மேலும், 29.03.2022 சிட்டி யூனியன் கிளை மேலாளர் நாகப்பட்டினம் திரு. சூரிய நாராயணன் என்பவரை விசாரணை செய்தும் அவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கணக்கு அறிக்கைகளை பார்வையிட்டதில் இருந்தும் இவ்வழக்கின் எதிரி அசோக்குமார் வழக்கின் வாதி தினகரன் அவர்களுக்க கொடுக்க வேண்டிய தொகை ரூ.27,49,249 கொடுக்காமல் மோசடி செய்தது தெரிய வந்தது. பிறகு எனது விசாரணையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை ச/பி.468,471,420 இ.த.ச.விலிருந்து 406,120(B),468,471 இ.த.சவாக 3.03.2023 அன்று சட்டப்பிரிவினை மாற்றல் அறிக்கைதயார் செய்து செய்தேன். பிறகு எனது அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரிகள் மீது ச/பி.406,120(B),468,471 இ.த.ச.பிரிவு ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

1. BU045190 என்ற எண்னுடைய COS.NO.03/2022 வழக்கிலிருந்து பெறப்பட்ட 100ரூ. குத்தகை ஒப்பந்த பத்திரம் (போலியான பத்திரம்) சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சென்னை தடய அறிவியல் துறைக்க ஆய்வுக்கு ஆதரமாக அனுப்பபட்ட கையெழுத்து மாடல்கள்(2 பக்கங்கள்) அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. DOC.NO. 76AB407173 என்ற எண்னுள்ள 20ரூ. ஒப்பந்த பத்திரம் அசல் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. PASSPORT PROFORMA ORIGINAL அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. PASSPORT APPLICATION FROM ORIGINAL (ARN : 17 – 1002205963) அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. BB 221175 என்ற எண்னுடைய 100ரூ. ஒப்பந்த பத்திரம் அசல் அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 13267 என்ற எண்னுள்ள 08.04.2016 தேதியிட்ட ESTIMATE AND QUOTATION அசல் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. சென்னை தடய அறிவியல் துறையிலிருந்து பெறப்பட்ட அறிக்கை அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மத்திய அயல்நாட்டினர் விவகாரத்துறையிலிருந்து வாதி வெளிநாடு சென்று வந்ததற்கான பெறப்பட்ட அறிக்கை அசல் அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. வாதியின் நாகப்பட்டினம் கிளை சிட்டி யூனியன் வங்கி கணக்கிற்கு எதிரியால் ஒப்பந்தம் செய்யப்பட்ட வாடகை தொகை வரவு வைக்கப்பட்டதற்கான வங்கியின் கணக்கு அறிக்கை அசல் அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசல் அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் 1வது எதிரியிடம் இருந்து வாதி கையொப்பங்கள் பெறப்படவில்லை என்பதால் அ.த.சா.ஆ,6 ஆவணத்தையும், அ.த.சா.ஆ,7,8,9,10,11 ஆவணங்கள் சமகாலத்து ஆவணங்கள் இல்லை என்பதாலும், முன்தேதியிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் ஆட்சேபனை செய்யப்படுகிறது. அ.சா.6ல் எதிரியால் மறுக்கப்பட்ட கையொப்பங்களை வைத்து தடய அறிவியல் அறிக்கை பெறப்பட்டதால் ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆவணம் 13 மத்திய அரசு துறையில் முத்திரை இல்லாத காரணத்தாலும் ஆட்சேபனை செய்யபடுகிறது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 16.05.2022 ம் தேதி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 10.09.2023ம் தேதி வரை மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்த 16.05.2022 முதல் 10.09.2023 க்குள் எனக்கு 1ம் எதிரி 23.12.2022, 17.04.2023 ஆகிய தேதிகளில் அசா.1 கையொப்பத்தை மாறி மாறி செய்யும் பழக்கம் உடையவர் என கூறி 15 நீதிமன்ற சான்றிட்ட நகல்களை எனக்கு தடயவியல் அறிக்கைக்கு உட்படுத்த வேண்டும் சொல்லி கடிதம் அனுப்பினார் என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்தினை எதிரி அனுப்பினார் என்றும், அதனை எனது அலுவலகம் பெற்றுக் கொண்டுள்ளது என்றும், ஆனால் அது வழக்கிற்கு பாதகம் ஆகும் என்பதால் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. 12.05.2023 ம் தேதி எதிரி மேற்கண்ட கோரிக்கை மனுக்களின் அடிப்படையிலும் கூடுதல் புலன் விசாரணை செய்யக்கோரி இந்த நீதிமன்றத்தில் CRLMP.NO. 2266/2023

என்ற எண்ணில் மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தகவல் கிடைக்கவில்லை. மேற்கண்ட மனுவிற்கு 17.07.2023 ம் தேதி எனது தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட மனு இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அவ்வாறு மனு தாக்கல் செய்யப்படவில்லை என்று உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. புகார்தாரருக்கும் 1வது எதிரிக்கும் இடையே ஏற்பட்டது என புகார்தாரர் புகாரில் கூறியுள்ள 4 வருட குத்தகை ஆவணத்தை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்த போது மோசடி ஆவணம் என கூறப்பட்டுள்ள ஆவணமும், 4 வருட குத்தகை ஆவணமும் நான் பெற்றிருக்கவில்லை என்றால் சரி. புகாரில் கூறியுள்ள 4 வருட குத்தகை ஆவணம் என்பது புகார்தாரரால் எதிரியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் அதனை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை 1ம் எதிரி 23.12.2022, 17.04.2023 ஆகிய தேதிகளில் சொல்லி கடிதம் அனுப்பியுள்ளார் என்பதால் தான் அதனை இல்லை என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. போலி குத்தகை ஆவணத்தில் வாடகை ரூ.1000 என சொல்லப்பட்டுள்ளது. புகாரில் தினசரி வாடகை ரூ.3600 என சொல்லப்பட்டுள்ளது. அ.சா.ஆ.14 வங்கிக் கணக்கில் காணப்படும் பெரும்பாலான தொகை ஆயிரத்தில் மடங்கில் உள்ளது என்றால் சரி. எதிரியின் வங்கிக்கணக்கில் இருந்து அ.சா.ஆ.14 வங்கிக் கணக்கிற்கு தொகை அனுப்பபட்டுள்ளது எனக்காட்ட எதிரியின் வங்கிக் கணக்கு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. புகார்தார் மேற்படி புகாரில் திரையரங்கின் தினசரி குத்தகை ரூ. 3600 என்பதை ஒரு தலைபட்சமாக எடுத்துக்கொண்டு சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பபட்டதாக சொல்லப்படும் 1ம் எதிரி, அ.சா.1ன் கையொப்பங்களை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு முன்பு பெறவில்லை என்றால்

சரி. காவல் நிலையத்தில் வைத்து பெற்பட்டுள்ளது. 1ம் எதிரி, அ.சா.1ன் கையொப்பங்கள் மேற்படி நபர்கள் செய்யவில்லை என்றும், அதனை 3ம் நபர் தான் செய்தள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே, மேற்படி கையொப்பங்க்ள அடிப்படையில் பெறப்பட்ட தடய அறிவியல் ஆய்வறிக்கை ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.12 ல் எந்த தேதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது யார் ஆய்வை மேற்கொண்டார் போன்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. என்ன வகையான அறிவியல் முறையை பயன்படுத்தி மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்பது ஆய்வறிக்கையில் குறிப்பு இல்லை என்றும், அதனை நானும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6. ஆய்வறிக்கையில் புகார்தாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள A1 முதல் 14, 15 கையொப்பங்கள் அனைத்தும் photo copy என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி  மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Xerox தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒரு நபரின் கையொப்பத்தினை சுருக்கவோ, விரிவாக்கம் செய்யவோ முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு A1 முதல் 14, 15 கையொப்பங்கள் அனைத்தும் Xerox தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாறுபாடு செய்யப்பட்டு ஆய்விற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. 7 முதல் 11 ஆவணங்கள் அனைத்தும் புகார்தாரர் 3ம் நபரை வைத்து கையொப்பங்கள செய்து எனது வசம் ஒப்படைத்து்ளளார் என்றும் அதனை சோதனை செய்யாமல் ஆய்விற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல.  அ.சா.ஆ.13 ஆவணத்தில் அரசாங்க முத்திரை உள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ.13 ஆவணத்தின் மேல்பகுதியில் 12.12.2022 என்றும் உதவி இயக்குநர் கையொப்பம் செய்தது 10.12.2022 என்றும் உள்ளது என்றால் சரி. 2வது பக்கத்தில் உள்ள பயண சம்பந்தமாக விபரத்திலும் அரசாங்க முத்திரை உள்ளதா என்றால் இல்லை.

7. 1வது எதிரி முன் பிணை மனுவுடன் புகார்தாரரின் கடவுச்சீட்டின் நகலை இணைத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரரின் கடவுச்சீட்டின் நகலில் 21.05.2022 ம் தேதி புகார்தாரர் வெளிநாடு சென்றதாக எதுவும் இல்லாத காரணத்தால் தான் அது பற்றி எனக்கு தெரியாது என்று சொல்கிறேன்

என்றால் சரியல்ல. புகார்தாரரின் கடவுச்சீட்டில் உள்ள முத்திரையும், வெளிநாட்டு பயணச்சீட்டில் உள்ள முத்திரையும், சம்பந்தபட்ட துறையால் வழங்கப்பட்டதா என விசாரணை செய்யப்பட்டவில்லை என்றால சரியல்ல. புகார்தாரர் சம்பந்தபட்ட தேதியில் சிங்கப்பூர் நாட்டில் எங்கு தங்கி இருந்தார் என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால சரி. 21.05.2022 ம் தேதி புகார்தாரர் வெளிநாடு செல்லவில்லை, விமான நிலையத்தில் பணிபுரியும் தனது உறவினர் சொக்கலிங்கம், கார்தத்திகேயன் ஆகியோரை வைத்து புகார்தாரரின் கடவுச்சீட்டில் உள்ள முத்திரையும், வெளிநாட்டு பயணச்சீட்டில் உள்ள முத்திரையும் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.13 என்பது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஒன்று என்றும், அதனால் தான் அது பற்றி நேரடியாக தெரியவில்லை என்றும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. மோசடி குத்தகை ஆவணத்தில் கையெழுத்திட்டதாக 2வது எதிரியை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். மோசடி குத்தகை ஆவணத்தில் காணப்படும் சாட்சி முகமது நாசர் த/பெ அப்துல் நசிர், 37 கத்தி லெப்பை தெரு, நாகப்பட்டினம் மற்றும் பி.டி.வேந்தன் த/பெ தியாகராஜன், கோயம்புத்துார், பிரதாப் த/பெ ராஜேந்திரன், நாகப்பட்டினம், ராஜேந்திர பிரசாத் த/பெ அஞ்சான், நாகப்பட்டினம் ஆகியோர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி நபர்கள் புகார்தாரருக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களை நா'ன விசாரிக்கவில்லை என்றும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2வது எதிரி புகார்தாரர் தான் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்தார் என்று சொன்னதால் அவர் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால சரியல்ல. புகார்தாரரின் காவல் துறை அரசியல் செல்வாக்கின் காரணமாக எதிரிகளுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.